Verdict

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.13/2025**
**P.W. 6**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.டாக்டர்.ஜீவா |
| Husband's Name | : | திரு.ஜான் அமலன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 43 |

(Accused is absent. Petition u/s.317 Cr.P.C filed and allowed. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of October 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது மணப்பாறையில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனையில் குடிமுறை மருத்துவராக பணியில் இருக்கிறேன். கடந்த 01.11.2024 ம் தேதி இரவு 10.00 மணி அளவில் தமிழ்செல்வன், த/பெ.ராஜகோபால்,சீகம்பட்டி, மணப்பாறையை சேர்ந்த வயது 30 மதிக்கத்தக்க ஆண் நபர் சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்டார். அவர் சுயநினைவுடன் காணப்பட்டார்.

அவர் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு ஆண் நபர் 01.11.2024 அன்று இரவு 8.00 மணியளவில் உசிலம்பட்டி எனும் ஊரில் வைத்து கத்தியால் தன்னை தாக்கியதாக கூறினார்.

நான் அந்த நபரை பரிசோதித்து பார்த்தபோது இடது முதுகின் கீழ்பக்கத்தில் ஒரு வெட்டுகாயம் 4 X 2 X 2 செ.மீ அளவில் காணப்பட்டது.

இடது தோள்பட்டையில் 2 X 1 X 1 செ.மீ ஒரு வெட்டு காயம் காணப்பட்டது. இடது பக்க தோள்பட்டையின் மேல் பகுதியில் இருந்து மார்பின் மேற்பக்க நெஞ்சுக்கூட்டில் ஆரம்பிக்கக்கூடிய முதல் எலும்புக்கு மேல் உள்ள கழுத்து எலும்பில் (collar bone ) 1 X 1 X 1 செ.மீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதிக்க பரிந்துரைக்கப்பட்டது. அவர் தனக்கு உள்நோயாளியாக சிகிச்சை எடுக்க விரும்பம் இல்லை என்று தெரிவித்துவிட்டார். நான் பதிவு செய்த விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ.7** ஆகும். என்னிடம் காட்டப்படும் கத்தி போன்ற ஆயுதத்தால் அந்த நபர் தாக்கப்படும்போது நான் மேலே கூறிய காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

முதல்விசாரணையில் சொன்ன விவரங்களை தான் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது சொன்னேன். நான் அந்த நபருக்கு எந்த சிகிச்சையும் அளிக்கவில்லை என்றால் அவருக்கு ஊசி மருந்து போடப்பட்டது. அதை நான் விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை. காயம்பட்ட நபரை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் சதீஷ்குமார் என்ற நண்பர் அழைத்து வந்ததாக உள்ளது என்றால் சரிதான். நான் பதிவு செய்த விபத்து பதிவேட்டில் காயத்தின் விளிம்புகள் பற்றி குறிப்பிடவில்லை. நான் குறிப்பிட்ட மூன்று காயங்களும் வெட்டு காயங்கள் ஆகும். குத்து காயங்கள் இல்லை. காயம்பட்ட நபர் என்னிடம் ஆயுதங்கள் தொடர்பாக கூறிய விவரத்தை தான் விபத்து பதிவேட்டில் பதிவு செய்தேன். முதல் விசாரணையின்போது என்னிடம் காண்பிக்கப்பட்ட ஆயுதத்தை காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது காண்பித்து விசாரிக்கவில்லை. நான் விபத்து பதிவேடு

WEB COPY

பதிவு செய்தவுடன் காவல் துறைக்கு தகவல் தெரிவித்துவிட்டேன். அந்த நபருக்கு ஏற்பட்ட காயங்கள் வேகமாக முள் வேலியில் விழும்போது ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 13/2025**
**P.W. 7**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ராஜேந்திரன் |
| Father's Name | : | திரு.பாலமுத்து |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 60 |

(Accused is absent. Petition u/s.317 Cr.P.C filed and allowed. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of October 2025.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மணப்பாறை தாலுகா, சூளியாப்பட்டியில் வசித்து வருகிறேன். கடந்த 04.11.2024ம் தேதி காலை 9.00 மணியளவில் நானும், சிவராஜ் என்பவரும் குமார் சலூன் கடை அருகில் பேசிக்கொண்டிருந்தபோது மணப்பாறை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்தார். அந்த பார்வை மகஜரில் என்னிடமும் சிவராஜுடமும் கையொப்பம் வாங்கினார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதாகும். முதல் கையொப்பம் சிவராஜுனுடையது ஆகும். அந்த பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.8** ஆகும். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சிவராஜ் எனது நண்பர் ஆவார். சிவராஜின் சொந்த ஊர் அத்திப்பள்ளம் ஆகும். இந்த வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் தமிழ்ச்செல்வனை தெரியும். தமிழ்ச்செல்வனின் அக்காவின் கணவர் தான் சிவராஜன் ஆவார். தமிழ்ச்செல்வனுக்கு காயம் பட்ட விபரம் தெரிந்து அவரை நான் பார்வையிட்டேனா என்றால் மருத்துவமனைக்கு சென்று

Vahe

பார்வையிட்டேன். அவர் காயம் பட்டதாக சொன்ன இடத்தை நான் அன்று உடனே சென்று பார்க்கவில்லை. அவர் காயம் பட்ட பிறகு எத்தனை நாட்கள் கழித்து நான் கையொப்பம் செய்தேன் என்றால் இரண்டு மூன்று நாட்கள் இருக்கும். நான் கையொப்பம் செய்யும்போது அந்த இடத்தின் அருகில் உள்ள டீக்கடை அடையார் பேக்கரி ஆகியவற்றில் ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் இருந்தார்கள். சிவராஜன் சொன்னதன் அடிப்படையில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியது போல் காவல் துணை கண்காணிப்பாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நானும் சிவராஜனும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு அவர்கள் இருவரும் எனக்கு வேண்டிய நபர்கள் என்பதால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.